**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 107/2023 |
| Deposition of Witness | : | PW– 8 |
| Name | : | காமராஜ் |
| Father Name | : | பொன்னுச்சாமி |
| Village | : | கோயமுத்தூர் |
| Taluk | : | கோயமுத்தூர் |
| Age | : | 40 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25.11.2025

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவை மண்டலம், மத்திய நுண்ணறிவு பிரிவில் காவல் ஆய்வளராக உள்ளேன். கடந்த 28.02.2023 ஆம் தேதியன்று மதியம் 13.00 மணிக்கு ஊதியூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.மாடசௌவுந்தரபாண்டி என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது திருப்பூர் மாவட்டம் சுகாதார பணி இணை இயக்குநார் கனகவள்ளி என்பவர் கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப ஊதியூர் காவல் நிலையக் குற்ற எண். 23/2023 – U/S: 15(3), Indian Medical Act 1956 r/w 420 IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்து காங்கேயம் காவல் பொறுப்பு ஆய்வளார் திருமதி.விஜயலட்சுமி என்பவரிடம் 28.02.2023 ம் தேதி ஒப்படைத்துள்ளார். பின்னர் அவரின் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகள் கனகராணி ஹரிகோபாலகிருஷ்ணன், ரமேஷ்குமார், கிருஷ்ணன் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் இவ்வழக்கின் எதிரியான பிஎஸி என்பவரை 18.15 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும் மேல்விசாரணை செய்ய வேண்டி காங்கேயம் வட்ட காவல் ஆய்வாளர் என்னிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தார். இவ்வழக்கில் தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொண்டு 03.03.2023 ம் தேதி கோவிந்தசாமி (எ) தம்பு என்பவரையும்

10.03.2023ம் தேதி மருத்துவர் தமிழ்செல்வன் என்பவரின் 08.04.2023ம் தேதி தலைமை காவலர் ரவி, முருகனந்தம், மற்றும் எஸ்.எஸ்.ஐ மாடசௌந்தரபாண்டியன் ஆகியோர்களை விசாரித்து கடந்த 08.04.2023ம் தேதி இவ்வழக்கின் எதிரியான பிளஸி என்பவர் மீது சட்டப்பிரிவு 15(3) Indian Medical Act 1956 & 420 IPC குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

கடந்த 28.02.2023ம் தேதி ஊதியூர் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் உதவி ஆய்வாளர் பூமிநாதன் ஆவார். அன்றைய தினம் நான் வேறு பணியில் இருந்ததால் நான் பொறுப்பு ஆய்வாளர் இல்லை. அசா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை நான் மறுவிசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்று எஸ்.ஓ.சி இடத்தை பார்த்தாக எந்த கோப்பும் இல்லை. அசா.4 ரவி காவலர் அங்கு எப்படி சென்றார் என நான் விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் இல்லை. காவல் நிலைய பொறுப்பு அலுவலர் உத்தரவின் பேரில் சென்று இருப்பார். அன்றைய தினம் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் பூமிநாதன் ஆவார். அவர் இல்லை என்றால் அடுத்த படிநிலையில் உள்ள காவலர் உத்தரவின் பேரில் சென்று இருப்பார். அ.சா.4 ரவி எந்த அலுவலர் உத்தரவின் பேரில் அங்கு சென்றார் என எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் வழக்கமாக SHO அவர்களின் உத்தரவின் பேரில் செல்வது தான் காவல் துறையின் நடைமுறை. கடந்த 23.02.2023ம் தேதி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் காவல் நிலையம் வந்தார்களா என்றால் வந்தார்கள். அன்றைய தினம் பொறுப்பு ஆய்வாளர் நான் தான் ஆவேன். என்னை அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் என்னை சந்திக்கவில்லை. நான் தலைமை காவலரை விசாரித்த தேதியான 08.04.2023ம் தேதி தான் எனக்கு தெரிய வந்தது. சிறு பந்தோஸ்க்கு எல்லாம் ஆய்வாளர் அனுமதி தேவையில்லை. 23.02.2023ம் தேதி என் காவல் நிலையத்தில் எந்த விதமான எழுத்து மூலமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. இவ்வழக்கில் காவலர் வையத்துரை என்பவர் விசாரணை அதிகாரி கிடையாது என்றால் சரிதான். என்னிடம் வழக்கு கோப்பு 23.02.2023ம் தேதி தொடர் புலன் விசாரணைக்காக வைக்கப்பட்டது. 23.02.2023ம் மருத்துவமனை சீல்

வைக்கப்பட்டது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்று பார்வையிடவில்லை. இந்த வழக்கில் எந்த சான்று பொருட்களோ, சான்று ஆவணங்களோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு கோப்பின் படி சோதனை ஆய்வுக்கு சென்ற போது மருத்துவர் தமிழ்செல்வன் பணியில் உள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சாட்சிகளும் மருத்துவர் தமிழ்செல்வன் பணியில் இருந்தாக தங்கள் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். கடந்த 08.04.2023 ம் தேதி நான் விசாரித்த சிறப்பு உதவி ஆய்வாளர் மாடசவுந்தரபாண்டியன் எனது விசாரணையில் தட்டச்சு செய்த புகார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் எழுத்து மூலமான புகார் என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். ஆனால் தவறுதலாக தட்டச்சு பிழை செய்துவிட்டார்கள். இவ்வழக்கின் கிராம நிர்வாக அலுவலர் யாரையும் நான் விசாரிக்கவில்லை. 27.02.2023 ம் தேதி எங்கள் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையை பூட்டி சீல் வைக்க மாவட்ட ஆட்சியர் எந்தவித எழுத்துமூலமான உத்தரவு கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. மருத்துவ மற்றும் ஊரக நலப்பணி இணை இயக்குநர் கனகராணி அவர்களிடம் தெரிவித்து இருக்கலாம். பதிவு செய்த மருத்துவர் ஒருவர் மருத்துவம் பார்த்து கொண்டிருக்கும் போது மருத்துவமனையை பூட்டி சீல் வைக்க முடியாது என்றால் சரிதான். அந்த மருத்துவமனையில் மருத்துவ கழிவுகள் சரியான முறையில் அகற்றப்படமால் இருந்ததால் பொது மக்களின் நலன் காக்க சீல் வைத்தாக சாட்சி கனகராணி அவர்கள் சொல்லியுள்ளார். எனது விசாரணையில் அவர் அவ்வாறு சொல்லவில்லை. ஆய்வாளர் விஜயலட்சுமி அவர்களிடம் சொல்லியுள்ளார். இந்த புகார் 6 நாட்கள் தாமதமாக கொடுப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி எந்த தனி நபர் என்று சொல்லி மருத்துவம் எதுவும் பார்க்கவில்லை என்றும் அந்த மருத்துவமனையில் முறையான மருத்துவர் தமிழ்செல்வன் தான் வைத்தியம் பார்த்து வந்தார் என்றும் விடுதலை சிறுத்தை காட்சியினர் உண்மைக்கு புறம்பான காரணங்களை கூறி தகராறு செய்தும் மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட தவறான புகாரின் பேரில் எவ்வித சான்று ஆவணங்கள் இல்லாமலும் 24.02.2023 ம் தேதி நாளிதழ் மற்றும் சமூக வளைதளங்களில் போலி மருத்துவர் கைது என்றும் பரவிய செய்தி என்று பின் யோசனையில் 5 நாட்கள்

காலதாமாக கொடுக்கப்பபட்ட புகாரின் பேரில் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.25 19:05:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்